**மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை டி.என். 25ஜி–0121 என்ற பதிவு எண் கொண்ட பழைய அம்பாசிடர் சீருந்தினைக் கழிவு நீக்கம் செய்தல்.**

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.2) துறை.

அரசாணை (டி) எண். 24 | நாள் 10.01.2008

படிக்கப்பட்டவை:

1. மாவட்ட ஆட்சித் தலைவர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை மாவட்டம் கடிதம் எண். பி7/9609/07, நாள் 13.11.07

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண். 90158/2007/எஸ்.ஜி.எஸ்.ஒய். 1.1 நாள் 21.11.07.

----

**ஆணை**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவண்ணாமலை, முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் / திட்ட அலுவலரின் பயன்பாட்டிற்காக அம்பாசிடர் சீருந்து எண்.டி.என்.25ஜி–0121, 1998–ம் ஆண்டு வாங்கப்பட்டது என்றும் தற்பொழுது அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் அலுவலக பயன்பாட்டிற்கு மிகவும் சிரமமாக உள்ளது என்றும், மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் வல்லுநர் குழு இவ்வாகனத்தை பழுது பார்ப்பது சிக்கனமாக இராது என்று தெரிவித்ததால் வல்லுநர் குழுவின் கருத்தினை ஏற்றுக் கொண்டு மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் இயக்குநர் மேற்குறிப்பிட்ட வாகனத்தை முதிரா நிலையில் கழிவு செய்து விற்பனை செய்ய பரிந்துரைத்துள்ளார் என்று தெரிவித்து சீருந்து எண். டி. என். 25ஜி–0121ஐ கழிவு நீக்கம் செய்து ஆணை வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார். இச்செயற்குறிப்பினை ஏற்று உரிய ஆணை பிறப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. முதிரா நிலையில் கழிவு செய்ய பரிந்துரைக்கப்படும் வாகனத்தை கழிவு செய்யும் அதிகாரம் அரசு ஆணை (நிலை) எண். 2275, உள் (போக்குவரத்து) துறை, நாள் 10.10.1990–ன்படி அரசிடம் உள்ளது.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பை கவனத்துடன் ஆய்வு செய்த அரசு, திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் அம்பாசிடர் சீருந்து எண். டி.என். 25ஜி–0121ஐ முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்யலாம் என்ற மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநரின் பரிந்துரையை ஏற்று மேற்குறிப்பிட்ட வாகனத்தை கழிவு நீக்கம் செய்ய ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி //

**க.அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு செயலாளர்.